ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1715/13 - 2011 ජූලි 20 වැනි බදාදා - 2011.07.20
*1715/13 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.- பீ.21/78*

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*20 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்செலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் -*

*(அ) இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அலுவல்களின் நிர்வாகம் பாரதூரமாக சீர்குலைந்துள்ளதென திருப்திப்படுவதன்மேல் மேற்கூறப்பட்ட சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின், கட்டளைச் சட்டத்தின், நியதிச் சட்டத்தின் துணைவிதியின், ஒழுங்குவிதியின் அல்லது விதியின் நியதிகளின்படி இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பேரவைக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது விதிக்கப்பட்ட அல்லது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கும் புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்துக்காக மேற்சொல்லப்பட்ட பல்கலைக்கழகம் தொடர்பில் தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதற்கென திரு. நிமால் ரஞ்சித் அர்த்தநாயக்க என்பவரை 2011, ஏப்பிறல் 21 ஆந் திகதியிலிருந்து இக்கட்டளையால் நியமிக்கின்றேன்; அத்துடன்*

*(ஆ) இருபதாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் என்னால் ஆக்கப்பட்டு 2011, யூன் 24 ஆந் திகதிய 1711/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையை இல்லாதொழிக்கின்றேன்.*

*திசாநாயக்க முதியான்செலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க,*
*உயர்கல்வி அமைச்சர்.*

*கொழும்பு,*
*2011, ஏப்பிறல் 20.*

*8-94*